# மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு விருது

## உலக பாதுகாப்பு அமைப்பு வழங்கியது

சென்னை, டிச.3–

அமெரிக்காவில் உள்ள உலக பாதுகாப்பு அமைப்பு, பாதுகாப்பு தரநிலைகளை மிகச் சரியாக கடைபிடித்து பாதுகாப்பை உறுதி செய்யும் நிறுவனத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அளவில் விருதுகளை வழங்கி வருகிறது. இந்த விருதுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆறு நிறுவனங்கள் மட்டும் தேர்வு செய்யப்படுவது வழக்கம். 2020–ம் ஆண்டுக்கான இந்த மதிப்புமிக்க விருதை இந்தியாவில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பெற்றுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், முன்மாதிரியான பாதுகாப்பு தரங்களை உறுதி செய்தல், பாதுகாப்பு பதிவுகளை திறம்பட பராமரித்து வருகிறது. அத்துடன் பொதுமக்கள், உடைமைகள், வளங்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக பின்பற்றி வருகிறது. பொறியாளர்கள், ஊழியர்களுக்கு, பாதுகாப்பு, சுற்றுச்சூழல் சார்ந்த நிகழ்ச்சிகளை அவ்வப்போது நடத்துதல் மற்றும் அதன் ஊழியர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வுக்காக தனித்துவமான அக்கறை காட்டுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விருது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.